மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

*5046. திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங் கோட்டையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

*5369. திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தூத்துக்குடியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

*5648. திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) காங்கேயம் தொகுதியில், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1990 சனவரி 20]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா கேள்விகளும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. விடையும் ஒரே மாதிரியாக இருக்கின்ற காரணத்தால் அனைத்துக் கேள்விகளுக்கும் சேர்த்துப் பதிலளித்திருக்கிறேன்.

திரு. சு. குருநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை என்பது தென்னகத்தின் ஆக்ஸ்போர்ட் என்று அழைக்கின்ற அளவிற்கு அதிகமான கல்லூரிகள் கொண்ட ஒரு நகரம் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாங்களும், அமைச்சர் அவர்களும் நன்றாக அறிவீர்கள். ஆகவே, அந்த நகரத்திற்கு மேலும் பெருமை சேர்க்கின்ற அளவுக்கு, அங்குள்ள மக்கள் பயனடையும் வகையில் மீண்டும் இதனைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இரண்டிலும் ஏறத்தாழ 200 பட்டதாரிகள் ஒவ்வோர் ஆண்டிலும் படித்து வெளி வருகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் மேலும் ஏதாவது கால்நடை மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தினால் அதன் மூலம் படித்து வெளிவருகின்ற பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அது விபரீதமான நிலையை ஏற்படுத்திவிடும். அதைத் தவிர்க்கும் பொருட்டு மீண்டும் இன்னொரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் எங்கேயும் கால்நடை மருத்துவக் கல்லூரி இல்லாத காரணத்தால் தென் மாவட்டங்களைச் சார்ந்த மாணவ மாணவிகள் சென்னைக்கு அல்லது கோயம்பத்தூருக்குச் சென்று படிக்கிற சூழ்நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் உடனடியாக கால்நடை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க முடியாது என்று இப்போது சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தனியார் துறையில் யாராவது கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைக்க முன்வந்தால் இந்த அரசு அனுமதி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே நம்முடைய மாநிலத்திலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் படித்து 200 பட்டதாரிகள் வெளி வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு இப்போது அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்ற சூழ்நிலையில் இருக்கும்போது மேலும் தனியார்களுக்கு இதுபோன்று கால்நடை மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க அனுமதி வழங்கி, மேலும் பட்டதாரிகள் அதிக அளவில் வெளி வந்தால் அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, அது மேலும் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும். அப்படி படித்து வருகிறவர்களுக்கு எல்லாம் முழுமையாக பணி பாதுகாப்பு, வேலை வாய்ப்பு போன்ற பல்வேறு பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டுவிடும். இந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்த மட்டிலும் மருத்துவக் கல்லூரிகளிலிருந்து பட்டதாரிகளை அதிக அளவில் ஏற்படுத்துவதை விட விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயிற்சிகளைக் கொடுத்து கால்நடைகளை வளர்ப்பதற்கு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையிலே தான் அண்மையிலே 20–9–1989 அன்று நம்முடைய தமிழினத்தினுடைய தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு பல்கலைக் கழகத்தையே துவங்குவதற்கு அனுமதி வழங்கி, அது துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே தனியார்களுக்கு இப்போது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு அனுமதி வழங்குகின்ற திட்டம் முழுமையாக அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

இந்து சட்டத்தின கீழ் பரம்பரைச் சொத்தில் பெண்களுக்குத் சம உரிமை வழங்கும் சட்டத் திருத்தத்திற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளது குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 18–1–1990 அன்று இந்த அவையிலே உரையாற்றும்போது இந்து வழிமுறை உரிமை (வாரிசுவுடைமைச்) சட்டத்தின்கீழ் பரம்பரைச்